வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி

வழக்கு எண். **CC.254-2022**

வழக்கு சாட்சி. அ.சா.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமுதா | வயது | : | **48/2026** |
| கணவர் பெயர் | : | ரவிச்சந்திரன் | தாலுகா | : | அறந்தாங்கி |
| கிராமம் | : | சிட்டங்காடு | தொழில் | : | வீட்டு குடித்தனம். |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness is verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

<u>தேதி</u> **: <u>30.07.2026</u>**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனது கணவர் ரவிச்சந்திரனும் எதிரியின் கணவர் சீனிவாசனும் உடன் பிறந்த சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி விபரத்தை எனது புகாரிலும் நிரூபன வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஏதேனும் பணிபுரிந்து வருகிறேன் என்றால் இல்லை வீட்டில் தான் இருந்து வருகிறேன். எனக்கு மட்டுமே சொந்தமான சொத்துக்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு வங்கி கணக்குகள் உள்ளதா என்றால் உள்ளது. இன்றைய தேதியில் எனது வங்கி கணக்கில் எவ்வளவு சேமிப்பு தொகை இருக்கும் என்றால் சரியாக ஞாபகம் இல்லை மூன்று லட்சம் இருக்கும். எனது சொத்தினை சீனிவாசன் விற்பனை செய்த தொகையில் பாக்கி கொடுப்பது சம்பந்தமாக தான் இவ்வழக்கு காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு காசோலை தொகை 25 லட்சத்தை சீனிவாசன் எனக்கு தரவில்லை என்று வழக்கு தாக்கல் செய்ததாக கூறுகிறேன் என்றால் ஆமாம். எந்த இடத்தில் உள்ள சொத்து என்றால் சென்னையில் உள்ள சொத்தாகும். எந்த வருடத்தில் அந்த சொத்தினை வாங்கினேன் என்றால் 2006 ஆம் வருடம் வாங்கினேன் தேதி ஞாபகம் இல்லை. எவ்வளவு தொகைக்கு அந்த சொத்தினை கிரயம் பெற்றேன் என்றால் 5 லட்சத்திற்கு கிரயம் பெற்றேன். யாரிடமிருந்து மேற்படி சொத்தினை கிரயம் பெற்றேன் என்றால் வெங்கடாசலம் என்பவரிடமிருந்து வாங்கினேன். சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. எனது கணவரின் உடன் பிறந்த சகோதரர்களில் சீனிவாசனை தவிர மற்ற சகோதரர்கள் அனைவரும் சிட்டாங்காட்டில் தான் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். சீனிவாசன் மட்டும் பல வருடங்களாக சென்னையில் தான் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நான் குறிப்பிடும் மேற்படி சொத்தை கிரையம் பெற்ற அதே தேதியில் சீனிவாசனுக்கு ஒரு பொது அதிகார பத்திரத்தை எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணத்தை பதிவு செய்த அதே சார்பதிவகத்தில் தான் மேற்படி பொது அதிகார பத்திரமும் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2006 ஆம் வருடத்தில் இருந்து 2021 ஆம் வருடம் வரை அந்த பொது அதிகார பத்திரம் அமலில் தான் இருந்தது என்று சொன்னால் ஆமாம் நாங்கள் பலமுறை ரத்து செய்ய கோரியும் அவர் ரத்து செய்து தரவில்லை. மேற்படி சொத்தை நான் கிரயம் வாங்கிய தேதியிலிருந்து சீனிவாசன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் பணம் கொடுத்து சீனிவாசன் தொழில் செய்தார். மேற்படி சொத்தை கிரயம் பெற்ற காலகட்டத்தில் சீனிவாசனுக்கும் அவரது முதல் மனைவிக்கும் விவாகரத்து வழக்கு நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு பணம் கொடுத்ததாக கூறும் நான் எந்த தேதியில் எவ்வளவு கொடுத்தார் என்றால் அந்த விபரத்தை எனது கணவர் என்னிடம் சொல்ல மாட்டார். சீனிவாசன் 2021 ஆம் வருடம் நான் சொல்லும் சொத்தை இவ்வழக்கின் எதிரிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். என்னிடம் சொல்லாமலேயே எழுதி கொண்டார்கள். எனது வாழ்வு சான்றிதழ் இல்லாமல் சீனிவாசன் மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தி விட்டார் என்று ஏதேனும் குற்றவியல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. சிட்டாங்காடு கிராமத்தில் சீனிவாசன் ஒரு வீடு கட்டி உள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டிற்கு எனது கணவர் பாதை கொடுத்தால் தான் சீனிவாசன் செல்ல முடியும் என்று சொன்னால் சரியல்ல. பாதை உள்ளது. சீனிவாசனை தவிர அவரது தகப்பனார் வழியில் பாத்தியப்பட்ட அவரது சகோதரர்கள் அவர்களது பூர்வீக சொத்தினை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். சீனிவாசனுக்கு பாதை சம்பந்தமாக நாலு சென்ட் நிலத்தை கிரயம் பெற்று தருவது குறித்து எனது கணவரிடம் பேச்சுவார்த்தை நடந்தது என்று சொன்னால் அது என் கணவருக்கு தான் தெரியும். சீனிவாசன் எங்களுக்கு 81 லட்சம் பணம் தர வேண்டும் என்று ஊர் பஞ்சாயத்தில் முடிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். சீனிவாசன் 81 லட்சம் பணம் தருவது சம்பந்தமாக ஒரு பத்திரம் எழுதி வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பத்திரத்தின் நகலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் பத்திரம் தான் அந்த 81 லட்சத்திற்காக எழுதப்பட்ட ஆவணம் ஆகும். அந்த பத்திரம் 06.07.2022 தேதி எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். சீனிவாசன் மேற்படி பத்திரத்தில் கொடுக்க வேண்டிய தொகைக்கு காசோலை கொடுத்த விபரங்களும் அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகளில் ஒரு காசோலை தான் இவ்வழக்கு காசோலை என்றால் சரிதான். சீனிவாசனின் மேலாளர் குமாரினை தாக்கியதாக கூறி பஞ்சாயத்துர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு கணவருக்கு தான் தெரியும். எனது கணவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன். எனது இடத்தில் சீனிவாசன் கட்டிடம் கட்டி தொழில் செய்தார் என்று சொன்னால் சரிதான். அது சம்பந்தமாக எங்களுக்கும் சீனிவாசனுக்கும் வாடகை ஒப்பந்தம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. 2006 ஆம் வருடத்தில் இருந்து மாத வாடகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரி சீனிவாசனிடமிருந்து 45 லட்சம் ரூபாய்க்கு அந்த சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே 10,10 லட்சமாக மூன்று முறையும் 26 லட்சமாக ஒரு முறையும் காசோலை மூலம் பணம் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் சீனிவாசனின் நிறுவனத்தில் எப்போது பணிபுரிந்தார் என்று சொன்னால் 2021 ஆம் வருடம் ஆரம்பத்தில் இருந்து 2021 ஆம் வருடம் முடிவுவரை பணிபுரிந்தார். இவ்வழக்கு சீனிவாசன் எனக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகைக்காக தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். 2-ம் எதிரி

நிறுவனத்தின் தொழில் சார்ந்த நடவடிக்கைக்காக இவ்வழக்கு காசோலை கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சீனிவாசன் அவரது 56 லட்சம் பணத்தை நாங்கள் அச்சுறுத்தி பறித்துக் கொண்டோம் என்று எங்கள் மீது பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்று சொன்னால் சரிதான். அதேபோல் சீனிவாசன் தனது சகோதரர்கள் தனக்கு சொத்தினை பிரித்துக் கொடுக்கவில்லை என்று கூறி அறந்தாங்கி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்று சொன்னால் சரிதான். 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சீனிவாசனை அச்சுறுத்தி தான் இவ்வழக்கு காசோலை வாங்கப்பட்டது என்று சொன்னால் இல்லை. இவ்வழக்கு காசோலைக்கு சட்டரீதியாக எவ்வித செல்லுபடி தன்மையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2006 ஆம் ஆண்டு சீனிவாசனால் வாங்கப்பட்ட சொத்து அவரது சொந்த பணத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. 2006 ஆம் ஆண்டு சமயத்தில் சீனிவாசனின் முதல் மனைவியுடன் விவாகரத்து வழக்கு நடைபெற்று வந்ததால் பெயரளவிற்கு என் பெயரில் சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் கிரயம் வாங்கப்பட்ட அதே தேதியில் சீனிவாசனுக்கு நான் ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல மின்சார இணைப்பு போன்றவற்றிற்கு நான் ஊரில் இருந்து வர முடியாது என்பதால் எழுதி கொடுத்தேன். நான் உண்மையில் கிரயம் பெறாததால் தான் நான் கிரயம் பெற்றதாக கூறப்படும் சொத்தில் சீனிவாசனை முழு அனுபவத்தில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரி சீனிவாசனிடம் சரியான மறுபயனுக்கு தான் அந்த சொத்தினை கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். அதனால் இவ்வழக்கின் எதிரிக்கும் எனக்கும் எவ்வித கொடுக்கல் வாங்கலும் தனிப்பட்ட முறையில் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் சீனிவாசன் எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றால் சீனிவாசன் மீது தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இவ்வழக்கின் எதிரி மீது நடவடிக்கை எடுக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்தால் தான் அவரது கணவரிடமிருந்து பணத்தை வாங்க முடியும் என்ற காரணத்தினால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால் இவ்வழக்கின் எதிரி இந்த காசோலை மோசடி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்படக்கூடிய நபர் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை:

இல்லை

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது. |
| | ஓம்/-.திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி,<br>பி.எஸ்.சி., எல்.எல்.பி.,<br>நீதித்துறை நடுவர்,<br>அறந்தாங்கி. |